# பெருநகர சென்னை மாநகராட்சி

## செய்தி வெளியீடு

**செ.வெ.எண். 128** **நாள்: 04.03.2026**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தண்டையார்பேட்டை மண்டலத்தில் காமராஜ் நகர் 2வது தெருவில் உள்ள நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையத்தில் ரூபாய் 1.29 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள இளஞ்சிறார்களுக்கான ஆரம்ப நிலை பயிற்சி மையத்தினை இன்று காணொலி காட்சி வாயிலாக திறந்து வைத்தார்.**

**இம்மையத்தில் வழங்கப்படும் சேவைகள் குறித்து மாண்புமிகு மேயர் திருமதி ஆர்.பிரியா அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டார்**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், இன்று (04.03.2026) பெருநகர சென்னை மாநகராட்சி, தண்டையார்பேட்டை மண்டலம், வார்டு-44க்குட்பட்ட, காமராஜ் நகர் 2வது தெருவில் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையத்தில் ரூபாய் 1.29 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள இளஞ்சிறார்களுக்கான ஆரம்ப நிலை பயிற்சி மையத்தினை காணொலி காட்சி மூலம் திறந்து வைத்தார். அதனைத் தொடர்ந்து, மாண்புமிகு மேயர் திருமதி ஆர்.பிரியா அவர்கள், நேரில் சென்று பார்வையிட்டு இளஞ்சிறார்களுக்கான ஆரம்ப நிலை பயிற்சி வழங்குவது குறித்து அலுவலர்களிடம் கேட்டறிந்தார்.

இளஞ்சிறார்களுக்கான ஆரம்பகால பரிசோதனை மற்றும் சிகிச்சை மையம் (Early Intervention Centre – EIC) என்பது 0-6 வயது குழந்தைகளில் காணப்படும் வளர்ச்சிதாமதங்கள், பிறவிக்குறைபாடுகள், ஊட்டச்சத்துக் குறைபாடுகள் மற்றும் நோய்களை மிக ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து சிறப்புச் சிகிச்சை அளித்து பூரணகுணமடைய செய்வதற்கு பெருநகர சென்னை மாநகராட்சி, பொது சுகாதாரத் துறை ஆரம்ப கால பரிசோதனை மற்றும் சிகிச்சை மையத்தை உருவாகியுள்ளது. ஆரம்பகால கண்டறிதலும், சரியான நேரத்தில் வழங்கப்படும் சிகிச்சையும் மாற்றுத்திறன்களின் தீவிரத்தைக் குறைத்து, குழந்தைகளின் மொத்த வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்தை மேம்படுத்த உதவுகிறது.

இளஞ்சிறார்களுக்கான ஆரம்பகால பரிசோதனை மற்றும் சிகிச்சை மையத்தில் "4 D's" எனப்படும் பிறவிக் குறைபாடுகள் (Defects), ஊட்டச்சத்து குறைபாடுகள் (Deficiencies), நோய்கள் (Diseases), மற்றும் வளர்ச்சி தாமதங்கள்/மாற்றுத்திறன்கள் (Developmental delays) ஆகியவற்றை ஆரம்பத்திலேயே கண்டறிந்து சிகிச்சை அளிக்க ஏற்படுத்தப்படும் மையமாகும் சிகிச்சை, ஆலோசனை மற்றும் பரிந்துரை போன்ற பல்துறை சேவைகள் இம்மையத்தில் வழங்கப்படுகின்றன.

மேலும், இம்மையத்தில் பிறப்பு முதல் 6 வயது வரை குழந்தைகளின் 4 வகையான குறைபாடுகளுக்கான பரிசோதனை, குறிப்பிட்ட உடல் நலக்கோளாறுகளை ஆரம்ப காலத்திலேயே கண்டறிதல், முழுமையான உடல் நிலை மதிப்பீடு, பரிசோதனை, நோயறிதல்,

மருத்துவ சேவைகள், செயல்முறை சிகிச்சை, உளவியல் சேவைகள், ஒளியியல் சேவைகள், பேச்சு-மொழி சிகிச்சை, கண் பார்வை சேவைகள், ஆய்வக சேவைகள், உளவியல் – சமூகவியல் சேவைகள் மற்றும் பரிந்துரை சேவைகள், தொடர் கண்காணிப்பு சிகிச்சை, தேவையான அறுவை சிகிச்சைகள் உள்ளிட்ட சேவைகள் வழங்கப்படும்.

இந்த சிறப்பு வாய்ந்த இளஞ்சிறார்களுக்கான ஆரம்ப கால பரிசோதனை மற்றும் சிகிச்சை மையம் மத்தியம் மற்றும் தெற்கு வட்டாரங்களில் விரைவில் துவங்கப்படவுள்ளது என்பது குறிப்பிடப்பட்டது.

இந்நிகழ்வில் வடக்கு வட்டார துணை ஆணையாளர் திரு.கட்டா ரவி தேஜா, இ.ஆ.ப., நிலைக்குழுத் தலைவர்கள் திருமதி எஸ்.சர்வஜெயாதாஸ் நரேந்திரன் (வரி விதிப்பு மற்றும் நிதி), டாக்டர் கோ.சாந்தகுமாரி (பொது சுகாதாரம்), மண்டலக்குழுத் தலைவர் திரு.நேதாஜி யு.கணேசன், மண்டல அலுவலர் திரு.ராஜ்குமார் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**